வெள்ளிக்கிழமை தோறும் வெளி வருவது

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

உ
சிவமயம்

# இந்து சாதனம்
# HINDU ORGAN

சைவ பரிபாலன சபை வெளியீடு

பிரதி விலை சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணிமீ 28-ம் உ   அச்சகம்: சைவபபிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.   தொலைபேசி: 356

புத்- அஅ]   யாழ்ப்பாணம்:-   நள ஞு   மார்கழிமீ   உ-டு   வெள்ளிக்கிழமை (17 - 12 - 1976)   [இல: நஎ

# நாடெங்கும் நாவலர் நன் நினைவு

## குரு பூசை, கருத்தரங்கு, அரு நூல்கள் வெளியீடு

## சபைகள், சங்கங்கள், சனசமுகநிலையங்கள் சகலமும் சால்புற நிகழ்த்தின

மாதங்களிற் கார்த்திகைக்கோர் வனப்புண்டு; சோதித் திருநாள் துலங்கும் திங்கள் என்பதொன்று. அந்த ஆதியை அல்லும் பகலும் அநவரதமும் வணங்கி, வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்கத் திருத்தொண்டாற்றிய ஞான சம்பந்தப் பெருமான் அடிச்சுவட்டில் நின்று சமயப் பணியாற்றிய நல்லை. நாவலர் நற்றகையாரின் குருபூசை நிகழும் காலம் என்பதொன்று.

சைவ பரிபாலன சபை ஆதரவில் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நாவலர் பெருமான் குருபூசையும், விழாவும் காலையும் மாலையும் முன்னர் நிகழ்ச்சிநிரலிற் கூறியாங்கு சிறப்பாக நிறைவுற்றன.

மாலை 6-00 மணியளவில் சைவபரிபாலன சபைத் தலைவர்: திரு. ச. செல்வராஜா அவர்களது தலைமையில் ஊர்காவற்றுறைத் தேசியப் பேரவை உறுப்பினர் பண்டிதர் வித்துவான் கா. பொ. இரத்தினம் அவர்களும், வித்துவான் க. சொக்கலிங்கம் ('சொக்கன்') அவர்களும் சிறப்புச் சொற்பொழிவாற்றினர். பண்டிதர் பேசும்போது கூறியதாவது —

வளர்ச்சி 3-ஆம் பக்கம்

## வள்ளி மணாளன்
### நாட்டிய நாடகம்

கொழும்பு, கண்டி, திருமலை, யா மேடையேற்றப்படும்

கோப்பாய்—கிறிஸ்தவக் கல்லூரி நுண்கலை மன்றமும், ஆனைக்கோட்டை நாட்டியகலா கேத்திரமும், கொக்குவில் கலாமவனமும் ஒருங்கிணைந்து தயாரிக்கும் வள்ளி மணாளன் என்னும் நாட்டிய நாடகம் 1977 ஆம் ஆண்டு ஜனவரி மாத முற்பகுதியில் கொழும்பு கண்டி, திருகோணமலை, யாழ்பாணம் ஆகிய இடங்களில் மேடையேற்றம் பெற இருக்கிறது. இதற்கான பாடல்களை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி ஆசிரியரும், புல்லாங்குழல் வித்துவானுமாகிய திரு ஏ. நமசிவாயம் அவர்கள் ஆக்கியுள்—ளார்கள்.

திருமதி. சரஸ்வதி பாக்கியராஜா (சங்கீதவித்துவான்) அவர்களும், திரு. ஏ திலகேஸ்வரன் (சங்கீதபூஷணம்) அவர்களும் பின்னணி பாடுகிறார்கள். மற்றும் கலாபவன வாத்தியக்குழுவினரும் பங்குபற்றுவார்கள்.

1977ம் ஆண்டு ஏப்ரல்மாதமளவில் மலேசியாவில் மேடையேற்றவும் நிர்வாகஸ்தர்கள் திட்டமிட்டுள்ளார்கள். என்பது குறிப்பிடத்தக்கது.

3.12.76 வெள்ளிக்கிழமை மாலை 5.00மணிக்கு கொக்குவில் கலாபவன மண்டபத்தில் நிறைவெய்திய ஆரம்பத்துடன் இதற்கான முயற்சிகள் ஆரம்பமாகியுள்ளன. ந, நி.

## சைவ சித்தாந்த எழுச்சிப்பெருவிழா

இலங்கை மெ. ஆதீனமும் அ. இ. சை. புலவர் சங்கமும் இணைந்து நடாத்தும்

12 12 76-ல் சைவப் புலவர் சங்கத்தலைவர் திரு வ. கந்தசாமி ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற ஷை சங்க நிர்வாக

(வளர்ச்சி 2 பக்கம்)

## உலக இந்து மாநாட்டுக்கு எங்கள் ஆசிரியர்

இம்மாதம் (19 12 76 முதல் 29-12-76 வரை) இரு வாரங்களாக மலேசிய குவாலாலம்பூரில் உலக இந்து மாநாடு நிகழவிருக்கின்றது.



இலங்கைப் பிரதிநிதிகளில் ஒருவராக சைவ பரிபாலன சபை சார்பில் சபை உபதலைவரும், 'இந்துசாதனம்' ஆசிரியருமாகிய திரு. நம. சிவப்பிரகாசம் 17-12-76 மலேசியாவுக்கு மாநாட்டிற் கலந்துகொள்ளச் செல்கின்றார்.

மல்லாகம் பழம்பிள்ளையார் கோயிலில் வழிபாடு செய்துகொண்டு மலேசியப் பயணத்தை மேற்கொண்ட திரு சிவப்பிரகாசம் அவர்களை சைவபரிபாலனசபை யாழ். திருமுறை மன்றம், யாழ். சைவ சமய அபிவிருத்திக் கழகம ஆகியவற்றின் பிரதிநிதிகள் வழியனுப்பி வைத்தனர். 'இ'

உ

## நாவலர் தினத்தில் 'நாவலரும் கோயிலும்' வெளியீட்டு விழா உரை

நாவலர் குருபூசைத் தினத்தன்று நாவலர் தர்ம பாதுகாப்புச் சபையாரல் கொண்டாடப்பெற்ற நாவலர்தின விழாவில் 'நாவலரும் கோயிலும்' நூல் வெளியீட்டின்போது,

**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்**
வழங்கிய ஆசியுரை

வணக்கம்.

அ. யாழ்ப்பாணம் செய்து வைத்த தவப்பயனாக உதித்த மகான் நாவலர் பெருமான்.

மகான்களின் தூய எண்ணங்கள் பாழ்போவதில்லை. உரிய காலங்களிற் பயன் செய்தே தீரும்,

திருக்கேதீச்சரம் :

இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன் 1872-ஆம் ஆண்டில் நாவலர் பெருமானின் தூய உள்ளத்தில் திருக்கேதீச்சர எண்ணம் உதித்தது. அப்பொழுது திருக்கேதீச்சரம் பயங்கரம் விளைக்கும் பெரிய காடு சென்ற நூற்றாண்டிறுதியிலேயே நாவலர் பெருமானின் எண்ணம் பயன செய்யத் தொடங்கி இப்பொழுது பெரியதொரு கற்பகதருவாய் வளர்ந்து சைவ உள்ளங்களையெல்லாம் கொள்ளை கொண்டு,

'கருத நின்ற கேதீச்சரங் கைதொழக்
கடுவினை யடையாவே.'

என்று தோத்திரஞ் செய்து கை கூப்பச் செய்திருப்பதைக் கண்டு களிக்கின்றோம்.

X X X X

ஆ. i ஐந்தாண்டுத் திட்டம்.

நாவலர்பெருமானின் தூயஎண்ணங்களில் மற்றொன்று ஐந்தாண்டுத் திட்டம். அது மிக மிக முக்கியமானது;

ஒழுக்கமும் ஆரோக்கியமும் விவேகமும் உள்ள இருபதின்மர் வளர்ந்த மாணவர்கள், ஐந்து வருடம் பயிற்சி பெற்று வருடந்தோறும் வெளிவர வேண்டும்.

அவர்களில் ஒரு பகுதியார் சைவ போதகராயும், மற்றையோர் கற்றுவல்ல உபாத்தியாயராயு மிருப்பர்.

சைவ போதகர் கோயில் மூலமும். உபாத்தியாயர்கள் வித்தியாசாலை மூலமும் சமய பக்தியை வளர்த்து வருவர்.

இத் திட்டம் நாவலர்காலத்தில் நிறைவேறவில்லையாயினும் தூய எண்ணத்தின் தவ வலியால் திட்டத்தின் நிழலாயும் நிழலின் நிழலாயும் சில நல்ல காரியங்கள் நடைபெற்றதுண்டு; மேலும் நடைபெறுதற்கும் இடமுண்டு.

(வளர்ச்சி 2 - ஆம் பக்கம்)

**சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

நள ஹூ மார்கழி மீ உ-வ வெள்ளி

## சைவ சமயம் வளர்க்கும் மலேசியச் சால்பு

திரைகடல் ஓடியும் திரவியந் தேடுதல் பொருளாதார நெறியென் றுணர்ந்த எம் முன்னோர் பாரத நாட்டிலிருந்தும் இலங்கா தீபத்திருந்தும் மலேசியாவுக்குச் சென்று வாழ்க்கை வளம்பெற பெருக்கிய தோடமையாது தங்கள் மொழியை மதத்தை மரபு மாண்பை நன்கு பாதுகாத்து வந்தனர் என்பதற்கு அந்நாடுகளில் நடந்து வருகின்ற சமய சமூக நிகழ்ச்சிகள் சான்று பகர்ந்தவண்ணமா யிருக்கின்றன.

சிங்கப்பூர், மலேசியா தேசங்களின் அரசியல் அமைப்புக்கள் காலப் போக்கில் மாறிச் சுதந்திரத் தோற்றம சுலபமாய்த் தோன்றி ஆண்டுகள் பலவாகின்றன, பலமுகப்பட்ட முன்னேற்றங்கள் பொலிந்த நாடுகளாயிவை துலங்குவது மகிழ்ச்சிக்குரியதாகும் முற்போக்கில் மிக முக்கியமானது அங்கு வாழ் மக்கள் பல வேறு மதம் மொழிப் பாகுபாட்டுக்குரியவர்களாயிருந்தும் வெற்றுமையில் விபரீத மின்றி ஒற்றுமையும் தனித்துவ வளர்ச்சித் தகைமையும் உள்ளவர்களாய் ஓங்கி உகை நன்மதிப்பைப் பெற்றிருக்கின்றனர் என்பதே.

இந்து சமய மக்களைப்பற்றி எடுத்துரைக்கின் சொந்த மதவழிபாட்டு நெறிமுறைகளையும் முந்தையோர் முறையையும் குறிக்கோளாக அமைத்து மலேஷியா சிங்கப்பூர் மக்கள் கலாசார எழிலமைந்தவர்களாய் விளங்குகின்றார்கள் என்று கூறின நன்று பொருந்தும் வகையில சிலாங்கூர் சைவ சங்கம் மலேசிய இந்து சங்கம் சிங்கைச் சைவ சங்கம் போன்ற எழில் மிகு மன்றங்கள் வேத சிவாகம நெறிமுறையில் அமைக்கப்பெற்ற ஆலயங்களும் மடாலயங்களும் இந்நாடுகளின் நன்னய எழுச்சியைச் சுட்டிக் காட்டிய வண்ணம் இயங்குகின்றன.

அமைதியும், அமைவும். அணியும். அனைத்து நன்னெறியும் ஒருங்குறச் சமய நிகழ்ச்சிகள் ஆண்டு முழுவதும் விதிப்படி நடைபெறுகின்ற வகையில் இந்நாடுகளில் வசிக்கும் இந்துக்கள் பெரும் பேறுடையவர்கள் என்றே நாம பலமுறையும் எடுத்துக் கூறியிருக்கின்றனம்.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்"

ஆகவே மலேசியச் சைவச் சால்பினை அளப்பதற்கு ஆங்குவாழ் இந்துக்களின் கருமங்களே உரைகல்லாய் விளங்கும என்பதுபோதரும.

அனைத்துலக இந்துக்களையும் அங்கழைத்து விருந்தோம்பி கருத்தரங்கம் பொருத்தமாயமைத்து சமயத் தொண்டுகள் உலகெங்கும் அமைய வழிவகுத்துப் பணியாற்றும் மலேசிய இந்துக்கள் செல்வன் சுழலேதகும செல்வர்கள்.

"அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து நல்விருந் தோம்புவாள் இல்"

மலேசிய இல்லம் வெண்டாமரையாளும் செந்தாமரையாளும் சேர்ந்து நிலவும் நிலயம் அல்லவோ.

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினிலோங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெஞ்-
ஞானம்

இவையாவும் வாழ்க்கை மாநோக்காகக் கொண்டு மகோன்னதராக விளங்கும் காஞ்சிகாமகோடி ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள காட்டிய குறிக்கோள முயற்சி ஈட்டுக பெரும்பயனை.

தொல்லுயிர் யாவையும் வாழி. ஐந்தெழுத்தோங்கி வளர்கவே.

## நாவலர் தினத்தில்

[ 1 - ஆம் பக்கத்து வளர்ச்சி ]

நாவலர் பெருமானின் தூய எண்ணத்தின் நுண்ணிய ஆற்றலின் அலை செய்து வரும் மாற்றங்களுள் ஒன்றுக்கு அநுபவ பூர்வமான உதாரணம் ஒன்று கிடைத்திருக்கின்றது. அது வருமாறு:

X X X X

### ii கிராம வாசியின் மன மாற்றம்; வாய்தல் விசேடம்.

மிக மிகப் பின் தங்கிய கிராம வாசி ஒருவர் ஒரு சமயம நல்லூர்த் தேர்த் திருவிழாவுக்கு வந்தவர், அங்கேயுள்ள நண்பர் ஒருவருடன் பட்டணப் பிரவேசஞ்செய்து வண்ணார்பண்ணையில் ஒரு நாடகம் பார்த்து விட்டு, இரவு மூன்று மணி வரையில், மிகுதி இரவைக் கழிக்கும் பொருட்டு. உடன் வந்தவர் விரும்பியவாறு, அண்மையில் உள்ள கட்டட வாய்தலில் அமைந்த உயர்ந்த மேடையில் ஏறிப் படுத்துக் கொண்டார். தூக்கம் வரவில்லை. உடன் வந்தவரை அக்கட்டடம் பற்றி வினவினார். அவர் அக் கட்டடம் ஆறுமுகநாவலர் வித்தியா சாலை என்றார்.

என்றதும் கிராமவாசி பல கேள்விகளைக் கேட்டார், கேள்விகளில் ஒன்று 'நாவலர் இருக்கிறாரா?' என்பது.

உடன் வந்தவர் கேள்விகளுக்குப் பதில் சொல்வதோடமையாது மேலதிகமாகவும் ஒன்று சொன்னார்.

அது,

"இங்கே வளர்ந்தவர்களுக்கு உணவு வசதி செய்து இலவசமாகப் படிப்பிக்கின்றார்கள். அப்படிப் படித்த ஒருவரைத் தாம் அறிவார்" என்பது.

X X X X

அவ் வார்த்தை ஊசி மருந்து போல் கிராம வாசியின் இருதயத்தை ஊடுருவியது. கிராமவாசி மௌனியானார், பேய் பிடித்ததுபோன்ற நிலை உண்டாயது, திடீரென்று உண்டான தாக்கத்தை வெளியிடக் கூசி, ஏக்கங் கொண்டு, சிந்தனையில் ஆழ்ந்தார். வாழ்க்கை வரலாறு திரையிட்டது.

X X X X

இக் கிராம வாசி நல்ல கல்விச் சூழ்நிலையிற் பிறந்து வளர்ந்தவராயினும், பத்தாம் வயசு வரையில் பள்ளிப் படிப்புக்குப் புள்ளி வைத்து விட்டு, குறிப்பிட்ட பின் தங்கிய கிராமத்துக்குப் போய் வசிக்க வேண்டியவரா யினார்.

அங்கே முறையான படிப்புக்கு இடமில்லை. தூரத்திலுள்ள இராக் காலத் திண்ணைப் பள்ளிக்குப் போய்த் தூங்கி விழுவதுண்டு. வசிக்கும் கிராமத்தில் விவசாய முயற்சிதான் முக்கியம். இக் கிராம வாசியை முற்றுங் கவர்ந்தது சீட்டாட்டம். இந் நிலையில் தந்தையார் அவருக்குத் திருமணம் செய்து வைக்கவும் ஆயத்தம் ஆயினார். வயசு பதினெட்டு ஓடி மறைந்து விட்டது.

இவ் வரலாறு அப்பொழுது கிராமவாசியின் மனத் திரையில் எழுந்து நடந்தது.

X X X X

இங்ஙனமாக விடிகிற சமயம் இருவரும் எழுந்து நடப்பாராயினர். கிராமவாசி வித்தியாசாலைக் கட்டடத்

[ வளர்ச்சி 3 - ஆம் பக்கம் ]

## உயர்வுக்குரியது உலகம்

உயர்ந்தோர் மாட்டே உலகம் என்பது பழைய மொழி. உயர்ந்தோர் யாவர். சமயிகளாளே அச் சால்புடையர் என்பது வரலாறு விளங்க வைக்கும் உண்மை.

திருத்தொண்டர் புராணத்திலே சேக்கிழார் சுவாமிகள் உலகம் என்ற சொல்லின் தூய்மையையும் சுவையையும் சுட்டிக் காட்டும் பொருளையும் நன்கு நாலுவிடங்களில் எடுத்துக் காட்டியிருக்கின்றனர். "உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன்" இறைவனை உணர்ந்து அவன் நாமத்தை உச்சரிப்பது உலகுக்கு அருமையானதொரு சிரமம் என்றால் உணரவும் ஓதவும் உரியவர்கள் சமயிகளே.

ஞாலமே நின் புகழ் ஓங்க என்று வரும் திருமுறை அடி ஞாலம் என்பதன பெருமையைத் தொகுத்துணர்த்துகின்றது, இறைவன் புகழ் உலகெலாம் ஓங்குதல் வேண்டும்; எவ்வாறேனும் எனின் சமயிகள் மூலமே என்பது போதருகின்றது.

உலக மன்றம் என்ற பெரும் பெயர் தாங்கும் மத வழிச் சங்கம உயர்ச்சியின்பாலுள்ளது என்பதை எலலோரும் ஏற்றுக் கொள்வர்.

'இந்துமன்றம்' என்றாலே எழிலுக்குரியது. 'உலக இந்துமன்றம்' எனின் அதன் பெருமை, விசேட விருத்தப் பெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை

### சிதம்பரத்தில்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் 97 - ஆம் குருபூசை ( 12 - 12 - 76 ) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் நண்பகல் 12 மணி வரை சிதம்பரம் சேக்கிழார் கோயிலிலும், நாவலர் உயர்நிலைப் பள்ளியிலும் ஸ்ரீ நடராசர் கோயிலிலும் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றன.

அன்று மாலை 4 மணி முதல் நடந்த பாராட்டுக் கூட்டத்தில் திருவாரூர் புலவர்மணி திரு. மு. இரத்தின தேசிகர் அவர்கள் தலைமை வகித்துப் பாராட்டுரை வழங்கினர்.

திரு எஸ். எஸ் புருஷோத்தமச் செட்டியார் அவர்கள் பரிசுகளை வழங்கினார்கள்

காலை 7 மணி விநாயகர்வழிபாடு சிதம்பரம் சேக்கிழார் கோயிலிலும், அதையடுத்து ஆங்கிருந்து, ஷை உயர் நிலைப் பள்ளி மன்றத்திற்கு நாவலர் பெருமானின் திருவுருவச் சிலை முதற் பதிப்பு நூற் சுவடிகளுடன் பஜனை சகிதம் ஊர்வலமாக எடுத்து வரப்பெற்றன; முற்பகல் 9 மணிவரை பள்ளி மன்றத்தில் குருபூசை விழா ஆரமபமாயது. குரு வணக்கம் கீர்த்தனம் ஆதியன ஆசிரியை பாடினர், அடுத்து மாணவர்களுக்குத் தின் பண்டமும் பழமும வழங்கப்பெற்றன, நாவலர் கீர்த்தனை இசை அரங்கு திருமதி இராஜமணி சீதாராமன். திருமதி சரோஜா பால சுப்பிரமணியன் குழுவினர் நடத்தினர், நண்பகல் 12 மணிக்கு நடராஜர் கோயிலில் அன்னம் பாலிப்பும வழிபாடும் நிகழ்ந்தன. அன்று மாலை பாராட்டுக்கூட்டத்தில் நாவலர் இயற்றிய விநாயகர் துதி, முருகன் துதி ஆகியவை படிக்கப்பெற்று அதையடுத்து பள்ளி மாணவர்களால் கும்மி, நாவலர் கீர்த்தனை போட்டி பேச்சுப் போட்டி நாடகம் ஆதியாம் நிகழ்ச்சிகள் இடம பெற்றன; உயர் நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் நன்றியுரை நவிலும்போது "சிதம்பரத்தில் அன்று காலை முதல் நிகழ்ந்த நாவலர் குரு பூஜை விழா நிகழ்ச்சிகள் அத்தனையையும வானொலியில் அஞ்சல் செய்யவும், இந் நிகழ்ச்சிகளைத் திரைப் படமாக்கவும் உடன் நடவடிக்கை மேற் கொள்ளும் படி ஈழத்துச் சைவர்களின் சார்பில் யாழ். சைவபரிபாலன சபை விண்ணப்பித்துள்ளதை சபைக்குத் தெரிவித்தனர்.

[ எமது சிதம்பர நிருபர் ]

## சைவ சித்தாந்த,...

1-ம் பக்கத்து வளர்ச்சி

சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை மெய்கண்டார் ஆதீனமும் - சைவப்புலவர் சங்கமும் இணைந்து சைவ சித்தாந்த எழுச்சிப் பெருவிழாவை தைமாத இறுதியில் நடத்துதல்,

இந்தியா மெய்கண்டார் ஆதீன குருமகா சந்நிதானச் சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் இவ்விழாவில் கலந்து கொள்ள ஒழுங்குகள் செய்தல்.

.சமய நாடகப் போட்டி (எழுத்து) நடாத்துதல்.

# புன்மை இருட் கணம் போகப் பொழுது புலர்ந்தது

## மார்கழிநீராடி மாதேவன் வார்கழல்கள் வாழ்த்தி வணங்குவம்

## திருக்கேதீச்சரத்தில் திருவாசக விழா

எதிர்வரும் மார்கழித்திங்கள் 12-ஆம் நாள் (27—12—76) திங்கள் முதல் 21-ம் திகதி 5—1-77 புதன்கிழமை வரை உள்ள திருவெம்பாவைத் திருநாட்களில், திருக்கேதீச்சரம் திருவாசக மடத்தில் சாதனையும் திருவாசக விழாவும் நிகழும்,

**சாதனை நாட்கள்**

காலை 3—8 திருவெம்பாவை பராயணம், ஆலய வழிபாடு கூட்டு வழிபாடு. 9 — 12 புராணபடனம் - திருவாசகம் ஓதல்.

மாலை 3—5 கூட்டு வழிபாடு, கருத்தரங்கம்: 7 — 9 திருவாசக பாராயணம், விரிவுரைகள்.

புராணபடனத்தில் மெய்கண்டார் ஆதீனம் தம்பிரான் சுவாமி, இளைப்பாறிய உடையார் கு. அருளம்பலம், இளைப்பாறிய ஆசிரியர் மு. வைத்தியலிங்கம், வித்துவான் பொன். அ. கனகசபை, செல்லத்துரை சுவாமிகள், சைவப்புலவர் நா. பொன்னையா, ஆசிரியர் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

பக்கவாத்தியங்கள்: பண்ணிசைப்புலவர் வே: சிவஞானம் — வயலின். நா. ஆறுமுகம்— மிருதங்கம்.

**திருவாசகப் பெருவிழா**

மார்கழி மாதம் 8 ம் திகதி (2-1-77) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சிவபூசை மாநாட்டுடன் ஆரம்பமாகும்.

சிவபூசை மகாநாட்டிற்கு சிவஞானபாஸ்கரர் சிவஸ்ரீ ஐ கைலாசநாதக் குருக்கள் அவர்கள் பிரதம குருபீடம் தாங்குவார்கள்

மேற்படி ஞாயிறு காலை 3-30 — 2 வரை திருவெம்பாவை ஓதுதல், ஆலயவழிபாடு, சிவபூசை மகத்துவ உரைகள் முதலியன,

மாலை 3 — 5 மணிவரை புராணபடனம் - திருவாசகம் ஓதுதல்

இரவு 7 மணிக்கு திருவாசகப் பெருவிழா ஆரம்பமாகும் புலவர் அ. திருநாவுக்கரசு வரவேற்புரை நிகழ்த்துவர்.

## கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறைமாவட்ட நீதிமன்றம்

வழக்கு இலக்கம். 1 065 ஈடு

எழுதுமட்டுவாள் தெற்கு
சந்தையா வேலாயுதபிள்ளை — வாதி

எதிராக

உடுப்பிட்டி வடக்கு சின்னையா சுப்பிரமணியம் — பிரதிவாதி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியுமெனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனங்களை 1977 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26-ஆந் திகதி (26-1-1977) புதன்கிழமை காலை 9-00 மணி தொடக்கம் குறித்த ஆதனங்களினிடமாக இருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

1 ம் ஆதனத்தின் விலை (ஓலைக்கொட்டிலும் உண்டு) ரூபா 3200-00
2 ம் ஆதனத்தின் விலை ,, 1366-61
முழு விலை ,, 4566-61

**ஆதனடாப்பு**

1, வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று உடுப்பிட்டியிலுறை இராப்பினியன் தோட்டம் நிப 15குளி 29/32 இது 1946 ம் ஸூ வைகாசி மாதம் 13 திகதி உலாந்தாமேஸ்தர் எம் வேலுப்பிள்ளை அவர்களால் 926 ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டதும் யாழ்ப்பாண டிஸ்றிக் கோட்டின் 2 06 பி இலக்கப் பிரிவிடல் வழக்கின் கடைசித் தீர்வையோடு அணைக்கப்பட்ட படத்தின் படி 1ம், 2ம் 3ம், துண்டுகளாகப் பிரிக்கப்பட்டது இதில் 2ம் நம்பர்த்துண்டு நிப 4 குளி 15 3/32 இதில் தற்கால உலாந்தாவின் அளவைப்படி நில 5 எல்லைகிழக்குப் பின் விபரிக்கப்படும் 2ம் ஆதனமும் ஒழுங்கையும், வடக்கு ஆர். நல்லதம்பி சந்திரனுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், மேற்கு ஒழுங்கை தெற்கு காலஞ்சென்ற வேலுப்பிள்ளை பெண் பாறுபதியின் உரிமைக்காரருக்குமுடைய ஆதனமும் இவ்வெல்லைக்குட்பட்ட நிலம். வீடுகள், கொட்டில்கள், பனைகள், பயிர்கள் அடங்கலிற் சொரியலாய் நில ½ நீக்கி 1/5 பங்கு.

2, மேற்சொல்லப்பட்ட இராப்பினியன் தோட்டம் நிப 10 /4, இதில் 2/9 பங்கு வடமேற்குப்பக்கமாக நீக்கி மிகுதி நிப7குளி 17 1/2 இது மனவேற்றுமைப் பிரிவிடல் படியும் ஆட்சிப்படியும் தென் மேற்குப் பக்கமாகப் ½ பங்குக்கு நிப 2 குளி 17 7/8, இது அளவின் படி நிப 2 குளி 5 எல்லை கிழக்கு காலஞ் சென்ற விசுவலிங்கம் பெண் இலட்சுமிப் பிள்ளையின் உருமைக்காரருக்குடைய ஆதனமும ஒழுங்கையும் மேற்கு மேற்சொல்லப்பட்ட 1ம் ஆதனமும் வேறு ஆதனங்களும் தெற்கும் வடக்கும் ஒழுங்கை இவ்வெல்லைக் குட்பட்ட பனைகள் கொட்டில்கள அடங்கலிற் சொரியலாய் 1/5 பங்கு

மேற்குறித்த பிரதிவாதி குறித்த வாதிக்கு ரூபா 1233 உம் ரூபா 1000 வருடம் ஒன்றுக்கு 12 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1970 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 26 ம் திகதி வரையுமான வட்டியும் அதன் பின் தீர்வைமுழுத் தொகைக்கும் இறுக்கப்படும் வரை வழக்குச் செலவு ரூபா 21./85 கொடுக்க வேண்டியிருப்பதாலும் இதில் ரூபா 70 கட்டப்பட்டிருக்கிறது.

க. நா. சுப்பிரமணியம்
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்

புலோலி மேற்கு,
புலோலி.
12 - 12 - 76

### கசடறக் கற்க, அதற்குத்தக நிற்க ?



பக்தர்: "இக் காலத்தில் அனேகர், 'கசடறக் கற்க' என்பதோடு எல்லாமே பூர்த்தியானதாகக் கருதப் பார்க்கிறார்கள் ; 'கசடறக் கற்க — நிற்க அதற்குத் தக' என்னும் மந்திரத்தை மறந்தேவிடுகின்றார்கள்; இக் குறை நீங்க வேண்டுவது அவசியம்" என்று நல்லூர் நாவலர்மணி மண்டபத்தில் நிகழ்ந்த நினைவு விழாச் சொற்பொழிவில் கூறினார் சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,

சித்தர்: "பொருத்தமாக அம்மா சொல்லியிருக்கிறா! நம்மவர்களுள்ளே பலர் 'கற்க' ... பின் ... 'நிற்க' என்பதை, தத்தம் வாழ்க்கையோடு இணைப்பார்களேயானால் என்ன குறை?

"நாயன்மார் - நாதன்"

திரு எம். ஐயனாதன் தலைமையில் தமிழ் முழக்கம் புலவர் எம்' பி, எம் முகம்மது காசிம் ஆலீம் அவர்கள் மணிவாசகர் காட்டிய மருமறு பாதை' என்னும் பொருளிலும் செஞ்சொற் செம்மல் ச. விநாயகமூர்த்தி தமியனேற்கும் உண்டாங்கொல் என்னும் பொருளிலும் திரு; வை, சொக்கலிங்கம் அவர்கள் தில்லை மூதூர் ஆடிய திருவடி திருவாசகக் கச்சேரி - சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கம் அவர்கள் நன்றியுரை.

மார்கழி 1-ம் திகதி (3- 1-77) திங்கட்கிழமை

காலை 3-30 — 9 வரை திருவெம்பாவை ஓதல், ஆலய வழிபாடு 9 — 10 வரை புராணபடனம், 10 — 12 வரை தலைமை உரை:- திரு த, சுப்பிரமணியம் நிறைவேற்றுப் பொறியியலாளர்

விரிவுரைகள்; திரு. வே. இரகுநாதன், கை. திருஞானசம்பந்தக் குருக்கள், பண்டிதர் மு. ஆறுமுகம்.

மாலை 3-30 — 5 திருவாசகம் ஓதுதல் கூட்டு வழிபாடு, 7 — 9-30 தலைமை உரை: சுசிலா T. மூர்த்தி B. Sc.

விரிவுரைகள்; செல்வி தமிழரசி ஆறுமுகம், சுவாமி ஓங்காரானந்தாஜி, பண்டித வித்துவான் முருகவேள் பாலசுந்தரம் B. O. L., திருவாசகக் கச்சேரி Dr சிதம்பரநாதன் அவர்கள் நன்றியுரை.

### விநாயகர் பெருங்கதையும் திருமுறைப் பண்ணிசையும்

யாழ்ப்பாணம் பலாலி வீதி பரமேஸ்வரா சந்தியில் அமைந்திருக்கும் ஸ்ரீ வீரசக்தி விநாயக ஆலயத்தில் 7. 12.76 தொடக்கம் 21 தினங்களும் மாலை 6.30 மணிமுதல் யாழ் திருமுறை மன்றத்தின் திருமுறை பண்ணிசையும் அதனை தொடர்ந்து பெருங்கதை படிப்பும் இடம்பெறும் 21 ம் நாளாகிய 26, 12 76 விநாயக சஷ்டி அன்று பெருங்கதை பூர்த்தி விழாவும் 27-12-76 மகேசுர பூசையும் நடைபெறும்.

### யாழ்நகரில் கதம்பவிழா

இலங்கைப் பல்கலைக் கழகப் பேராதனை வளாக 'ஊற்று' மாணவர் மன்றம் மன்றத்தின் நிதிக்காக கதம்ப நிகழ்ச்சி ஒன்றினை நடத்தவுள்ளது யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெறும் இந் நிகழ்ச்சி 1—1—77 சனி கிழமை மாலை நிகழும். இசை, நடனம், நாட்டுக்கூத்து இன்னும் பல நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

## நாடெங்கும் நாவலர் நன்னினைவு

1- ஆம் பக்கத்து வளர்ச்சி

"நாவலர் பணி வீரத்துடன் கூடியது. எனவே தான் அது இன்றும் - என்றும் வாழக்கூடியதாக இருக்கின்றது. அன்று அந்நியர் ஆதிக்கத்தின் கீழ் கெடுபிடிகள் பல. அவற்றினூடேயும் நாவலர் பெருமான் துணிந்து செயற்பட்டார். இதனை இன்றைய இழம் சந்ததியினர் உணர்ந்து கொள்ள வேண்டும்"

இவ்வாறு பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் குறிப்பிட்டார்.

திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) பேசும்போது கூறியதாவது:—

"நாவலர் பெருமானின் திட்டங்களில் ஒன்று சிதம்பரத்திலேபாடசாலைஒன்று அமைந்து அப்பாடசாலையின் வாயிலாக ஒழுக்கமும் சமய நெறி பிறழாமையும் உடைய சமயபோதகர்களையும், ஆசிரியர்களையும் உருவாக்குதலாகும் இவர்கள் சமய வாழ்விற்கே தம்மை முற்றாக அர்ப்பணித்தல் வேண்டும் என்பது அவரின் வேணவா. சமயபோதகர்கள் ஆலயங்களிலே சமயப் பிரசாரகர்களாக நியமிக்கப்படுவர்; சமய ஆசிரியர்கள் பாடசாலைகளிலே சமயம் கற்பிக்க நியமிக்கப்படுவர், இவர்களுக்கான சம்பளமும் வழங்கப்படும்".

"இத்திட்டம் இக்காலத்திற்கு மிகவும் உகந்தது. எல்லாரும் சமயம் பேசலாம், எவரும் சமயம் கற்பிக்கலாம் என்ற இன்றைய நிலை உலகாயத வளர்ச்சிக்கே இடமளிக்கும்என்பதை நாம் மறந்துவிடல் கூடாது. எனவே, நாவலர் தினமாகிய இப் புனித நாளிலே அப்பெருமான் வகுத்த திட்டம் பற்றிச் சிந்தித்து அச்சிறந்ததொரு சமய ஆசிரிய பரம்பரை தோன்ற வழி செய்வோமாக." என்று கூறினர்,

## நாவலர் தினத்தில்

2-ஆம் பக்கத்து வளர்ச்சி

யைத் திரும்பிப்பார்த்துக்கொண்டே நடந்தார். உடன்வந்தவர் நல்லூரில் தங்க, கிராமவாசி அங்கிருந்து பத்து மைல் நடந்து தமது கிராமத்துட் புகுந்தார்.

x x x

மனம் எதிலும் ஈடுபடவில்லை; சிட்டாட்ட நண்பர்களைப் பார்ப்பதற்குக் கூடக் கண் இடங் கொடுக்கவில்லை. பெரிய மாற்றம்.

விநாயகப்பெருமானைச் சரணடைந்தார் கிராமவாசி. தமது படிக்க வேண்டும் என்னும் ஆசையை இராப்பகல் விண்ணப்பித்து அழுது புலம்பினார். மூன்றுமாசம் கழிந்தது.

விநாயகப்பெருமான் திருவருளை என்ன என்பது!

x x x

### பரீக்ஷை

அந்த ஆண்டு (1917) கார்த்திகை மாசத்தில் நாவலர் வித்தியாசாலையில் ஒரு நேரமுகப் பரீக்ஷை நடந்தது. அதில் அந்தக் கிராமவாசியும் பங்குபற்றினார். இது ஆச்சரியத்தின் மேல் ஆச்சரியம்.

அங்கே நடக்கும் காவியவகுப்பில் சேரக்கூடியவர்களைத் தேர்ந்தெடுத்தற்கு வைத்த பரீக்ஷை அந்தப் பரீக்ஷை. பலர் வந்திருந்தார்கள். குறித்த கிராமவாசியின் முறை வந்தது.

பரீக்ஷகர் (சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர் அவர்கள்) சில கேள்விகள் கேட்டுவிட்டு, 'கிறிஸ்த பள்ளியிற் படித்ததோ' என்றார்.

அந்த வினாக் கிராமவாசியை அங்கே கொண்டுவந்து சேர்த்தவருக்குப் (திரு ம. வே. நடராசர்) பெரிய சந்தேகத்தை உண்டாக்கிவிட்டது, அவர், மானேஜர் (திரு, த, கைலாசபிள்ளை) அவர்களைத் தனிமையிற் சந்தித்து, அந்தக் கிராமவாசியை மூன்று மாசம் வைத்திருந்து பாருங்கள் என்று மன்றாடினார். அதற்கு அவர்கள் ஒருவாறு உடன்பட்டார்கள். மூன்று மாசத்தின்பின் கிராமவாசியைச் சேர்த்தவருக்கு நன்றி தெரிவிக்கப் பட்டது கிராமவாசி கருமமே கண்ணாயினார்.

x x x

### படிப்பும் சித்தியும்

பரீக்ஷையில் எடுபட்டவர்கள் தனித்தமிழ் படித்து என்ன செய்வது என்று சொல்லிக்கொண்டு மெல்ல மெல்ல இரண்டொரு வருஷத்திற் கழன்று விட்டார்கள்.

1920ல் வகுப்பில் கிராமவாசி ஒருவரே எஞ்சியிருந்தார். வகுப்பு வழக்கம்போல நடந்து வந்தது, கிராமவாசி அழுங்கு போல இறுகப் பற்றிக்கொண்டு பத்து வருடகாலம் அங்கேதானே இருந்து விட்டார். 1925ல் மதுரைப் பண்டிதராய், 1930ல் பயிற்சி பெற்ற ஆசிரியராய், ஆசிரியகலாசாலை ஒன்றில் விரிவுரையாளருமாயினார்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

நாய் ஓட்டும் மந்திரம் நால் மறைவேதம்,
நாய் ஓட்டும் மந்திரம் நாதன் இருப்பிடம்,
நாய் ஓட்டும் மந்திரம் நாதாந்த சோதி,
நாய் ஓட்டும் மந்திரம் நாம் அறியோமே

The mystic word (சீ) used to drive away dogs,— it forms the four hidden Vedas, it is the seat of the Lord, it is the Light that transcends (all the 36 tatwas ending with Natham. Oh! we know not its real significance!

Hindu Organ

Friday, December 17, 1976

## Religion—The Road to Reality

The welfare of the world is what every noble person wishes for and works for. In the enlightening epic that is Mahabaratha, the background and source of the Great Gita, we find the highly elevating thought "To you I declare this holy mystery; there is nothing nobler than humanity" Humans have, therefore, a duty to perform to make the wide world feel the fact that humanity is in truth very noble in essence. Such a responsibility can be discharged only if man strives to pay due attention to the spiritual side of life, Revealing the strength of spirit is, therefore, essential for the progress of man — the welfare of the world.

It is in this aspect of human progress the aspirations of leaders of spiritual learning to make devotees give thought to problems that matter must be viewed. The Guru — Disciple form of conference is extended to wider circles of seekers after truth. Dialogues and discourses draw inspiration from this ideal of preaching How appropriate therefore is that the revered Sankaracharya Swamigal of Kamakoti Peedam of Kanchipuram of Puranic renown should have in his generosity that is the highest form of love, extended his exposition of spiritual progress to the Arangam of consultation that is popularly known as 'Conference.'

The World Hindu Council is a sure step towards the fulfilment of the realisation of the concept that humanity is most noble Here is an assembly that is august, not because the audience is far flung but because the activity is spiritual, that is practical as its seeks to inspire the devotees to undertake greater tasks in the direction of the welfare of the world, that is fruitful for the simple reason that the calamitous catastrophe in which humanity has found itself at present by the intervention of evil forces will be resolved, once man in general begins to realize his supreme duty — the duty to know himself.

In this context of the idea of a World Hindu Council sitting in Conference, it must be remembered that its purpose is certainly not to establish a world order or to propound the astounding theory of a unified Religion for all people. The Hindu stamp of religion represents the soul of the Hindus and denotes their spiritual experience and evolution of lofty thoughts. It does not denote that it is a social phenomenon peculiar to the Hindus. The purpose of this Council cannot be to establish the fact that religion is needed. That stage has longpast. The conception of God has come to be accepted even by the socalled atheists though with mental reservation. That there is a "Power not ourselves that makes for righteousness" is as in the words of Mathew Arnold commonly acknowledged.

What then is the immediate step the World Hindu Council has to take? To make the people learn the lofty ideals of life as lucidly elaborated in the Vedas, the Agamas, the Upanishads, the Shastras, the Puranas, the Thirumurais and the writings of the sages. The vastness of the Hindu Literature which is our holy heritage portrays the endeavours of literators to understand the tenets of religion and their experience of life according to the code of conduct envisaged therein. The W. H. C. under the lofty leadership of the spiritual guide, His Holiness Sri Sankaracharya Swamigal will be able to prepare a scheme of practice for the noble task of learning the Truth and living according to the teaching. Words will remain all empty unless followed up by work W. H. C. in keeping with its high aspirations must be able to make the people live for the welfare of the world which is the highest conception of duty. Religiousness, religious practice and religious conscience must be the guiding inspiration for this noble purpose. May the All Mighty Parameshwara bless the participants with sufficient strength of mind to undertake the laudable mission of spiritual service.

## A Great Nationalist and Leader of Saiva Renaissance

BY V. SIVASAMY

During the 19th century there was a great religious and cultural renaissance almost all over South Asia due to the foreign domination. A galaxy of leaders who were either educated in their mother tongue or in English and their mother tongue came to the forefront of a great renaissance. All of them loved their country, religion and language and tried to restore them to their pristine glory. They were conscious of the abuses in their society and religion and tried to reform them. Among these leaders Rajaram Mohan Roy, Sri Ramakrishna Paramahamsa, Swami Vivekananda, Aurobindo (from Eastern India), Dayananda Sarasvati (from Western India) Arumuganavalar, Migettuvatte Gunananda Hikkaduve Sri Sumangala and others (from Sri Lanka) deserve special mention.

A major part of Sri Lanka was subjected to foreign domination since the 16th century, successively, by the Portuguese, Dutch and British Though there was no immediate reaction to foreign rule, as time went on, there was a revival of Buddhism in the South Western Lowlands and especially the Kandyan kingdom, in the 18th century. In the Northern Sri Lanka, there was a parallel Saiva revival which culminated during the time of the great Navalar, in the 19th century. A good number of Tamil literary works mostly of the Saiva faith were written in the 18th and early 19th centuries Though Saivism lost royal patronage for three centuries, its vitality was not exhausted, in spite of the missionary activities backed by the state.

The Britishers allowed religious toleration. But Christian missionary activities continued with great vigour during the 19th century. In the Southern part of Sri Lanka, there were public debates, publications of tracts and books by the Christians and the Buddhists to vindicate their respective faiths. Towards the last quarter of the 19th century the Theosophical society strengthened the Buddhist revival. In the North too, there were similar tendencies. Navalar was the most prominent figure in the Saiva revival He had to counteract the missionary activities of the Christians by public lectures, publications and reforms within Saivism.

(To be continued)

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday December 17, 1976.

Editor-in-Chief R. N. Sivapirakasam

## Worship of Mother Goddess

The universe is but a manifestation of Sakti, the Divine Mother. Infinite are Her energies and one cannot find words to describe Her glory or praise Her adequately. By winning Her grace, one can get freed from delusion. She bestows not only material happiness but social welfare and spiritual realisation. The power that She symbolises has two dimensions—Vidya Sakti and Avidya Sakti. When someone fights, quarrels, exploits, and is self-centred, Avidya Sakti is in action. On the other hand, Vidya Sakti expresses itself in purity, devotion, compassion, service, unselfishness and other virtues. The contrast between the two can be presented thus: signing a cheque for contributing to a noble cause, as against committing forgery to get money for himself; the first one is an expression of Vidya Sakti and the second one Avidya Sakti. It is for the individual to choose the kind of Sakti he is going to seek.

Swami Ranganathananda, in a lecture at the Ramakrishna Math, Mylapore, said surrendering to the Supreme Being is a lofty principle, but one has to be something before one could say: "I am giving up everything and surrendering to the Divine Mother". For a beggar to say he has renounced everything has no meaning. The surrender envisaged by the doctrine is not that of a coward or a weakling, but a man of strength. There are infinite energy resources available to man, who has also the freedom, intelligence and choice in using them to face the challenges of life with courage. The Divine Mother likes those who put up a stiff fight, always heroic in attitude and without complaining or remaining inept, to reach high level of Vidya Sakti — the greatness of the hero in a tragedy lies not in his defeat or death, but in the fact that he goes down fighting all the way. Having made a valiant effort and having achieved something then one should say to the Divine Mother: "I am nothing before you. Whatever I have, I owe to you and your mercy. I am just a machine and you are the mechanic".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org